இங்கு வந்து குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்று தி.மு.க. சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்து நீடிக்காதவாறு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை அளித்தார்கள். பதிலுரை அளித்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்தவுடனே வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேன். திரு. துரைமுருகனுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அவர் கேள்வி கேட்பதற்குப் பதிலாக, நீண்ட விவாதம் போல எடுத்துச் சென்றதனால், நான் இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகள் நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அதற்கு மேலும் அவரது உரையை நீட்டிக்க வழியில்லை. அதனால் அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு இன்றைக்கு வெளியேற வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அவைக்கு வந்து, அவையின் நேரத்தை வீணடித்தது மட்டுமல்லாமல், அவைக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையிலே செயல்பட்டதனால், இதுபோன்று கண்ணியக் குறைவாக நடந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க தீர்மானத்தை முன்மொழியும்படி மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

6. அரசினர் தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைத்தல்

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“அவையிலே கண்ணியக்குறைவாக, அமங்கலமாகப் பேசி, பலமுறை சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் எச்சரித்தபோதும், பேரவைத் தலைவரின் ஆணையை மீறி, வேண்டுமென்றே

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 ஏப்ரல் 8

அவையில் குழப்பம் விளைவிக்கவேண்டும் என்ற நோக்கோடு, அவை நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டுமென்ற நோக்கோடு, பேரவை விதிகளுக்கு மாறாக, அவையின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் மீறும்வகையில், பேரவையின் அலுவல்களை நடைபெறாமல் இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக அவையில் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121 உள் விதி 2–ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இன்றும், நாளையும் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கப் பெற வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறிய

(மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு அவைக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்றும், நாளையும் அவையிலிருந்து நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 12– கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல்–தொடர்ச்சி. வெட்டுத் தீர்மானம் எண் 754, திரு. வெ. பொன்னுப்பாண்டி.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதுமுள்ள நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்து காப்பாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*